PRITEDUCATION - SS PRITHVI www.Padasalai.Net www.TrbTnpsc.com

KK12T

கன்னியாகுமரி மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

-----

வகுப்பு 12

**பொதுத்தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

ss prithvi

**குறிப்பு:** i) **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

ii) **கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) ஆர்ப்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம்

மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல்

ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் நீர்த்தழும்பல்

ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

3) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

4) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ............

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

5) **கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

**விளக்கம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று தவறு, காரணம் சரி.

இ) கூற்று தவறு, காரணம் தவறு. ஈ) கூற்று சரி, காரணம் சரி.

6) கீழ்க்காணபவற்றுள் வெ. இறையன்பு அவர்கள் எழுதாத நூல் எது?

அ) யுகசந்தி ஆ) வாய்க்கால் மீன்கள்

இ) ஏழாவது அறிவு ஈ) மூளைக்குள் சுற்றுலா

7) சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகளுக்குத் தொடர்பில்லாதது

அ) புயல் அபாயக் குறியீடுகள் ஆ) உத்தரவுக் குறியீடுகள்

இ) எச்சரிக்கைக் குறியீடுகள் ஈ) தகவல் குறியீடுகள்

8) **கூற்று 1** : பழங்காலத்து மூடர்களைக் கண்டு உடல் குலுங்கச் சிரி.

**கூற்று 2** : உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு. ஆ) கூற்று 1, 2 தவறு. ss prithvi

இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ) கூற்று 1, 2 சரி.

9) யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ............

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

PRITEDUCATION - SS PRITHVI www.Padasalai.Net www.TrbTnpsc.com



10) "காலை இளம்வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" இக்கவிதையில் .......... பயின்று வந்துள்ளது

அ) வினைப் படிமம் ஆ) பயன் படிமம்

இ) மெய்ப் படிமம் ஈ) உருப்படிமம்

11) **பொய்யா வானம்புதுப்பெயல்** பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

12) **பொருத்துக:**

அ) அயோத்தியா காண்டம் - 1) வீடணன்

ஆ) ஆரணிய காண்டம் - 2) சுக்ரீவன்

இ) கிட்கிந்தா காண்டம் - 3) குகன்

ஈ) யுத்த காண்டம் - 4) சடாயு

அ) 2, 3, 1, 4 ஆ) 4, 3, 1, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 2, 1, 4, 3

13) தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய்க்குறில் எழுத்துகள்

அ) 90 ஆ) 126 இ) 86 ஈ) 116

14) 'அறியலன்' - இச்சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை

அ) அறி+ய்+இல்+அன் ஆ) அறி+ய்+இல்+என்

இ) அறி+ய்+அல்+அன் ஈ) அறி+ய்+அல்+என்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) சூரியஒளி பட்டவுடன் நகரம் எவ்வாறு மாறியதாக அய்யப்ப மாதவன் குறிப்பிடுகிறார்?

16) இருவேறு உலகத்து இயற்கை என வள்ளுவர் கூறுவது யாது?

17) மாதவியின் அரங்கேற்றத்தின்போது இசைக்கருவிகள் ஒலித்தமுறை யாது?

18) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×2=4**

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21) வேளாண் மேலாண்மை பற்றிக் கம்பராமாயணம் கூறும் கருத்து யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** ss prithvi **7×2=14**

22) **பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க:**

கலை, கழை, களை

23) **உவமைத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:**

அச்சாணி இல்லாத தேர்போல

24) **பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

அ) ஊட்டாண்ட வெளையாண்ட கொழந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

ஆ) அண்ணனுக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான

25) **கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக:**

அ) கபிலன் திறமையானவர் என்று .......... (குமரன்) தெரியும்.

ஆ) உங்களுக்கு .......... (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

26) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) பொலிந்தான் ஆ) நினைக்கின்ற

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

PRITEDUCATION - SS PRITHVI www.Padasalai.Net www.TrbTnpsc.com



27) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:

அ) உள்ளொன்று ஆ) பூம்பாவாய்

28) சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: பலகை

29) குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

30) கலைச்சொல்லாக்கம் தருக:

அ) Rubber stamp ஆ) Stapler

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

31) 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.

33) 'நெல்லின் நேரே வெண்கல உப்பு' - இத்தொடரின்வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

34) யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### பிரிவு - 2

ss prithvi

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

35) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36) சென்னை நகரம் உருவாக்கம் பெற்றமையை விவரி.

37) திரைப்படத்தில் காட்சி மாற்றங்களுக்கு எத்தகைய உத்திகளைப் பயன்படுத்துகின்றனர்?

38) மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×4=12**

39) அ) எடுத்துக்காட்டு உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

- **கண்ணதாசன்**

41) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

(அல்லது)

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42) அ) வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

PRITEDUCATION - SS PRITHVI www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) தமிழாக்கம் தருக:

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writting, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

43) காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:**

நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வளர்ச்சிக்கும் நிகழ்கால வாழ்விற்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று

**வினாக்கள்:**

அ) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?

ஆ) தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது?

இ) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?

ஈ) நாம் அறிய வேண்டிய சிறப்புகள் எவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** 3×6=18

44) அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுரை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. **(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**

ஆ) பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46) அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க. **(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

ss prithvi

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக:** 4+2=6

47) அ) 'அறிவும் புகழும்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக. ss prithvi

join our channel for instant and more fabulous materials:
Whatsapp: https://whatsapp.com/channel/0029VaDuCPB0Qeae8MIiMv1k
Telegram: t.me/PRITEDUCATIONS

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com